கடந்த 2 நாட்களாக மீண்டும் விளம்பரங்கள்

ஆன்லைன் ரம்மி தடை சட்டத்துக்கு கவர்னர் அனுமதி தர வேண்டும்

சட்டத்துறை அமைச்சர் ரகுபதி வலியுறுத்தல்

சென்னை, நவ. 26: தாமதப்படுத்தாமல் சட்ட முன்வடிவுக்கு கவர்னர் அனுமதி தர வேண்டும் என சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கோரிக்கை வைத்துள்ளார்.

இதுகுறித்து சென்னை தலைமை செயலகத்தில் நேற்று அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

ஆன்லைன் ரம்மி சூதாட்ட தடை சட்ட முன்வடிவு தொடர்பாக கவர்னர் மாளிகையில் இருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் கேட்கப்பட்ட விளக்கங்களுக்கு சட்டத்துறை சார்பில் 24 மணி நேரத்தில் விளக்கம் தயாரித்து தந்திருக்கிறோம்.

முழுமையான தடை என்பது அரசியல் அமைப்பு கூறும் 19/1 ஜி-க்கு எதிரானதாகும் என்று கவர்னர் சொல்லி இருக்கிறார். அதற்கு நாம் சொல்லியிருக்கிற பதில், இந்த சட்டம் அரசியல் அமைப்பு கூறுகளுக்கு உட்பட்டுதான் இருக்கிறது என்பதை ஆதாரத்துடன் பதில் தெரிவித்து இருக்கிறோம். ஆன்லைன், ஆப்லைன் என்பதை வேறுபடுத்தவில்லை என்று கூறி இருக்கிறார். நாங்கள் வேறுபடுத்தி இருக்கிறோம்.

ஆன்லைன் மற்றும் ஆப்லைன் விளையாட்டுக்களை வித்தியாசப்படுத்தவில்லை என்று சென்னை நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கிறது என்று சொல்லி இருக்கிறார். ஆப்லைன் என்பது நேராக ஒருவருக்கொருவர் விளையாடுவது. அதில் தவறு நடப்பதற்கு வாய்ப்பு இருக்காது. ஆனால் ஆன்லைன் என்பது, அதில் என்ன புரோகிராம் செட் பண்ணி வைக்கப்பட்டுள்ளதோ அதன்படி விளையாடக்கூடியது. எனவேதான் ஆப்லைனை விட்டுவிட்டு, ஆன்லைன் சூதாட்டத்தை தான் நாம் தடை செய்திருக்கிறோம். அந்த வித்தியாசத்தையும் வேறுபடுத்தி காட்டி இருக்கிறோம்.

குறிப்பிடத்தக்க அளவு தடை மட்டுமே அனுமதிக்க முடியும் என்று சென்னை உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது என்று கவர்னர் சொல்லி இருக்கிறார். இதற்கும் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கங்களை கவர்னர் நிச்சயம் ஏற்றுக்கொண்டு, அந்த சட்டத்துக்கு ஒப்புதல் தருவார் என்று எதிர்பார்க்கிறோம். தற்போதுள்ள அவசர சட்டத்தின் மூலம் 27ம் தேதி (நாளை) வரை நடவடிக்கை எடுக்க முடியும். இப்போது இரண்டு நாட்களாக ஆன்லைன் விளம்பரம் வர தொடங்கியுள்ளன. அதனால்தான், கவர்னரை நேரில் சந்திக்க வேண்டும் என்று கடிதம் கொடுத்திருந்தோம். மேலும், தாமதப்படுத்தாமல் சட்ட முன்வடிவுக்கு அனுமதி தர வேண்டும். வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்ற முழுமையான ஒரு சட்டம் இயற்றப்படவில்லை. தமிழகத்தில் தான் அனைத்து விவரங்களையும் சேகரித்து முழுமையான சட்டம் தெளிவாக இயற்றப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற அகில இந்திய சட்டத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் முன்னிலையில் தமிழக அரசு இந்த சட்டத்தை கொண்டு வந்திருக்கிறது. நாங்கள் கொண்டு வந்தால் மட்டும் போதாது. நாங்கள் கொண்டு வந்தால் தமிழகத்தில் மட்டும்தான் கட்டுப்படுத்த முடியும். ஆந்திராவில் இருந்து ஒருவர் ஆன்லைன் மூலம் விளையாடினால் கட்டுப்படுத்த முடியாது. அதனால் ஒன்றிய அரசு முன்வந்து ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் பொதுவான ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். அதை, பரிசீலிப்பதாக ஒன்றிய அமைச்சர் பதிலுரையில் தெரிவித்தார்.

இந்த சட்டத்துக்கு கவர்னர் ஒப்புதல் அளித்தவுடன், தமிழகத்தில் மிகசிறப்பாக நிறைவேற்றி ஏழை எளிய மக்களை காப்பாற்றுவோம். கவர்னர் எங்களை அழைத்தால் உடனடியாக அவரை சந்திப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கவர்னருக்கே வெளிச்சம்

தொடர்ந்து நிருபர்கள், "எதிர்க்கட்சி தலைவர் சந்திக்க வேண்டும் என்றால் கவர்னர் உடனே நேரம் கொடுக்கிறார். அதேநேரம் மக்களின் ஒரு முக்கிய பிரச்னைக்காக தமிழக அமைச்சர் ஒருவர் கவர்னரை சந்திக்க நேரம் கேட்டால் தரவில்லை. இதற்கு என்ன காரணம்?" என்று நிருபர்கள் கேட்டதற்கு, "அது கவர்னருக்கே வெளிச்சம்' என்று கூறினார் அமைச்சர் ரகுபதி.

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
Central Bank of India
திருவள்ளூர் கிளை
4/3B C.V. நாயுடு சாலை, திருவள்ளூர்-602001
PH 044-27663310 (M) 9962044048,
Mail Id: bmchen4587@centralbank.co.in

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002-ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) மற்றும் விதி 3 & 8-ன்படி (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் அதிகாரம்பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் மூலம், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(12)-ன்கீழ் **கடன்தாரர் 1.Mr.S.பிரேம்குமார்,** S/o.லேட்.P.சாரங்கன், **2.Mrs.S.பச்சையம்மாள் (ஜாமீன்தாரர்),** W/o.Late.P.சாரங்கன், இருவரது முகவரி, எண்.27, கொசவன்பாளையம் கிராமம், திருப்பாச்சூர் அஞ்சல், திருவள்ளூர்-631203 **ஆகியோருக்கு 16.07.2022 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன் தொகையான ₹ 6,14,690.24** (16.07.2022 வரை அசல் மற்றும் வட்டியுடன்) மற்றும் 17.07.2022 முதல் வட்டியுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர்/ஜாமீன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன்தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4), விதி 8-ன்படி **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 21.11.2022 அன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக அடையாளூர்வமாக உடமையாக்கியுள்ளார்.**

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

இது முதற்கொண்டு

கடன்தாரர்/ஜாமீன்தாரரோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்தினை எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **சென்ட்ரல் பாங்க் ஆ.ப் இந்தியா, திருவள்ளூர் கிளைக்கு வரவேண்டிய கடன் தொகையான 21.11.2022 அன்றுள்ளபடி ₹ 6,36,267.24** செலுத்தப்பட்ட தொகை ஏதேனும் இருப்பின் அதுபோக மற்றும் 21.11.2022 முதல் திரும்ப செலுத்தும் காலம் வரை வட்டி, இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

அசையா சொத்து விபரம்

Mr.S.பிரேம்குமார் பெயரிலுள்ள வீட்டு சொத்து: காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.321/2A2, **கொசவன்பாளையம் கிராமம், திருப்பாச்சூர் மதுரா, திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 25.00 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 25.00 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 65.60 அடு, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 65.60 அடு **ஆக மொத்தம் 1615 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: சர்வே எண்.321/2A1, தெற்கு: ரோடு, கிழக்கு: காலி மனை, மேற்கு: ரோடு.

தேதி : 21.11.2022
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர்
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
தி நகர் கிளை: பழைய எண்.69, சர் தியாகராய ரோடு, பாண்டி பஜார், சென்னை-600 017 Ph: 044- 2815 2286 Email: iob0091@iob.in

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு [(Rule 8(1)]

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கீழ் கையொப்பமிட்ட அதிகாரி 13(12) பிரிவு மற்றும் விதி 3-ன்படி **02.08.2022 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டபட்ட கடன்பாக்கி தொகையான 31.07.2022 அன்றுள்ளபடி ₹ 1,84,40,879.95** (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து நான்கு லட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்து ஒன்பது மற்றும் பைசா தொண்ணூற்று ஐந்து மட்டும்) மற்றும் வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர்: Mr.சுந்தர் சைனில்ஸ்,** ∴ப்ளாட் எண்.T1 & T2, மனை எண்.99, 3வது தளம், VGP செல்வா நகர், 3வது மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை-600042, **மேலும் முகவரி,** 1-11-252/1A-ல் இருந்து 1D வரை, G8, அலாதீன் மேன்சன், ஷாப்பர்ஸ் ஸ்டாப் அருகில், பேகம்பேட் ஹைதராபாத்-500016 என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர், அடமானதாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன்தொகை முழுவதையும் செலுத்ததவறியதால், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின் படியும், **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 24.11.2022 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன்தாரர்களோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு வந்து சேரவேண்டிய கடன் தொகையான 31.07.2022 அன்றுள்ளபடி ₹ 1,84,40,879.95** (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து நான்கு லட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்து ஒன்பது மற்றும் பைசா தொண்ணூற்று ஐந்து மட்டும்) மற்றும் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள். கோரிக்கை அறிவிப்பு வெளியிட்ட பிறகு செலுத்தப்பட்ட தொகை ஏதேனும் இருப்பின் அதுபோக **சுவாதீனம் எடுத்த தேதிபடி (1.HL-009103464000022 – Rs.94,30,234/-, 2.HL-009103464000023 – Rs.94,28,034/-, 3.Loan No. 009103236000001 –Rs.1,35,025.00) மொத்த கடன் நிலுவைத்தொகை ₹** 1,89,93,293/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஒன்பது லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து இருநூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக் கொள்ளப்பட்டபடி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரிவிக்கிறோம்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

அசையா சொத்துக்கள் விபரம்

Nature of security: Mortgage

1.ஷெட்யூல் A: (அடமான சொத்து) ∴ப்ளாட் எண்.T1, 3வது தளத்தில் 1145 சதுர அடி ∴ப்ளாட் (பொது இடம் மற்றும் பொது பங்கு உட்பட), அதனுடன் மொத்தமுள்ள ஷெட்யூல் B சொத்தில் 3000 சதுர அடியில் 460 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்.

ஷெட்யூல் B: (மொத்த சொத்து) அனுமதி பெற்ற லேஅவுட்டின் சர்வே எண்.317/1A1, டவுன் சர்வே எண்.21, ப்ளாக் எண்.209, வேளச்சேரி கிராமம், வேளச்சேரி தாலுகா, சென்னை மாவட்டம், **மனை எண்.99, VGP செல்வா நகர், 3வது மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை-600042** என்னும் முகவரியில் **3000 சதுர அடி நிலம்.** 19.03.2018 தேதியிட்ட திட்ட அனுமதி எண்.. B2/1704/2017, 15.05.2018 தேதியிட்ட கட்டிட அனுமதி எண். CEBA/WDCN13/00136/2018. எல்லைகள்: வடக்கு: மனை எண்.88, தெற்கு: 30 அடி ரோடு, கிழக்கு: மனை எண்.98, மேற்கு: மனை எண்.100. நிலத்தின் அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 40 அடு, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 40 அடு, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 75 அடு, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 75 அடு. மேற்கண்ட சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம், வேளச்சேரி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்டது.

2.ஷெட்யூல் A: (அடமான சொத்து) ∴ப்ளாட் எண்.T2, 3வது தளத்தில் 1145 சதுர அடி ∴ப்ளாட் (பொது இடம் மற்றும் பொது பங்கு உட்பட), அதனுடன் மொத்தமுள்ள ஷெட்யூல் B சொத்தில் 3000 சதுர அடியில் 460 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்.

ஷெட்யூல் B: (மொத்த சொத்து) அனுமதி பெற்ற லேஅவுட்டின் சர்வே எண்.317/1A1, டவுன் சர்வே எண்.21, ப்ளாக் எண்.209, வேளச்சேரி கிராமம், வேளச்சேரி தாலுகா, சென்னை மாவட்டம், **மனை எண்.99, VGP செல்வா நகர், 3வது மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை-600042** என்னும் முகவரியில் **3000 சதுர அடி நிலம்.** 19.03.2018 தேதியிட்ட திட்ட அனுமதி எண்.. B2/1704/2017, 15.05.2018 தேதியிட்ட கட்டிட அனுமதி எண். CEBA/WDCN13/00136/2018. எல்லைகள்: வடக்கு: மனை எண்.88, தெற்கு: 30 அடி ரோடு, கிழக்கு: மனை எண்.98, மேற்கு: மனை எண்.100. நிலத்தின் அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 40 அடு, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 40 அடு, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 75 அடு, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 75 அடு. மேற்கண்ட சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம், வேளச்சேரி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்டது.

தேதி : 24.11.2022
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

சேதம் அடைந்த கிருஷ்ணா கால்வாய்

▶ ஊத்துக்கோட்டை தாமரைக்குப்பம் ஜீரோ பாயின்ட்டில் இருந்து பூண்டி ஏரிக்கு செல்லும் கிருஷ்ணா கால்வாயின் கரை பகுதிகள் ஆங்காங்கே சேதம் அடைந்துள்ளன. இடம்: ஊத்துக்கோட்டை, அம்பேத்கர் நகர்.

பி.எஸ் டேட்டா சயின்ஸ் அப்ளிகேஷன்ஸ் படிப்பு

சென்னை ஐஐடியில் சேர விண்ணப்ப பதிவு தொடக்கம்

சென்னை, நவ.26: சென்னை ஐஐடியில் 2023ம் ஆண்டுக்கான பி.எஸ். டேட்டா சயின்ஸ் அப்ளிகேஷன்ஸ் பட்டப்படிப்பில் சேர்வதற்கான விண்ணப்ப பதிவு தொடங்கியது.

விருப்பமுள்ள நபர்கள் https://onlinedegree.iitm.ac.in. என்ற இணையதளம் மூலமாக, ஜனவரி 16ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த திட்டம் குறித்துப் பேசிய ஐஐடி மெட்ராஸ் இயக்குநர் காமகோடி கூறும்போது, '' ஒவ்வொரு பாடத் திட்டத்திலும் நேரடிப் பயிற்சி மாணவர்களுக்கு வலுவான அடித்தளத்தை உருவாக்குதல் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் தலைப்புகளில் மாணவர்களின் திறனை வெளிப்படுத்துதல், கடுமையான மதிப்பீட்டு முறைகள் போன்றவற்றால் வேலை வாய்ப்பு சார்ந்த திட்டமாக இதனை உருவாக்கியுள்ளோம். இதன்மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் 112 மில்லியன் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆவடி அருகே மாணவிகளுக்கு பாலியல் தொல்லை

பள்ளி நிர்வாகி நள்ளிரவில் அதிரடி கைது

15 நாட்கள் நீதிமன்ற காவல்

சென்னை, நவ.26: ஆவடி அருகே திருநின்றவூர் லட்சுமிபுரம் பகுதியில் 20 ஆண்டுகளுக்கு மேலாக தனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. பள்ளியின் தாளாளர் சிந்தை ஜெயராமன். அவரது மகன் வினோத் பள்ளி நிர்வாகியாக உள்ளார்.

இப்பள்ளி மாணவிகளுக்கும் ஆசிரியைகளுக்கும் வினோத் பாலியல் தொல்லை கொடுத்ததாக குற்றம்சாட்டப்பட்டது. இதுகுறித்து தகவலறிந்ததும் பள்ளி மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் கடந்த 23ம் தேதி பள்ளியை முற்றுகையிட்டு, நிர்வாகி வினோத்தை கைது செய்யும்படி சாலைமறியல் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாதிக்கப்பட்ட பிளஸ் 2 மாணவியின் தாய் அளித்த புகாரின்பேரில், திருநின்றவூர் போலீசார் போக்சோ பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்து, ஆவடி அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளர் லதா தலைமையில் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். மேலும், தலைமறைவான பள்ளி நிர்வாகி வினோத்தை 4 தனிப்படை அமைத்து தீவிரமாக வலைவீசி தேடி வந்தனர்.

இதற்கிடையே, கடந்த 23ம் தேதி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில் 4 பேர் மற்றும் கணினி ஆசிரியரிடம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவு பொறுப்பாளர் கங்கைராஜ் விசாரணை நடத்தினார். மேலும் பாதிக்கப்பட்ட 3 மாணவிகள் நேற்று திருவள்ளூர் மாவட்ட கூடுதல் மகிளா நீதிமன்ற நீதிபதி ஜெ.பவித்ரா முன்பு தங்களின் பெற்றோருடன் ஆஜராகி தனித்தனியே வாக்குமூலம் அளித்தனர். இவை அனைத்தும் வீடியோ காட்சிகளாக பதிவு செய்யப்பட்டது.

▶ கைது செய்யப்பட்ட பள்ளி நிர்வாகி வினோத்.

இந்நிலையில், பள்ளி நிர்வாகி வினோத் நேற்று முன்தினம் பேஸ்புக் உள்பட பல்வேறு சமூக வலைதளப் பக்கங்களில் ஒரு வீடியோ வெளியிட்டார். அதில், எங்களது பள்ளியில் நீண்ட காலமாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நன்றி. எங்களின் பள்ளி மாணவ-மாணவிகள் மிக நல்லவர்கள். யாருடைய பேச்சையோ கேட்டு, என் மீது பாலியல் தொல்லை மற்றும் அத்துமீறல் என பல்வேறு அவதூறுகளை பரப்பி வருகின்றனர். நீங்கள் அனைவரும் இந்த வீடியோவை பார்க்கும் போது, நான் உயிருடன் இருப்பேனா எனத் தெரியாது. என்மீது பொறாமை காரணமாக பொய் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர். இதிலிருந்து விடுபட முடியாமல் நான் தவித்து வருகிறேன் என வினோத் பேசியுள்ளார்.

இதற்கிடையில், தலைமறைவான வினோத் மற்றும் அவரது மனைவி கோவாவில் இருந்து சென்னைக்கு வருவதாக ஆவடி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் லதாவுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு சென்னை விமானநிலையத்துக்கு ஆய்வாளர் லதா போலீசாருடன் விரைந்து சென்றார்.

விமானநிலையத்தில் இருந்து வெளியே வந்த வினோத்தை பிடித்தனர். ஆவடி அனைத்து மகளிர் காவல் நிலையத்துக்கு அவரை கொண்டு வந்து விசாரித்தனர். இதைத் தொடர்ந்து போக்சோ பிரிவின் கீழ் நேற்று காலை வினோத்தை போலீசார் கைது செய்தனர். பின்னர், திருவள்ளூர் மகிளா நீதிமன்ற நீதிபதி சுமித்ரா தேவி முன்பு ஆஜர்படுத்தி, நீதிபதியின் உத்தரவின் பேரில், 15 நாள் காவலில் வினோத்தை புழல் சிறையில் அடைத்தனர்.

ஆபாச ஆடியோ விவகாரம்

அண்ணாமலையின் தூண்டுதலால் திருச்சி சூர்யா திட்டினாரா?

கட்சியை விட்டு நீக்காமல், பொறுப்பில் இருந்து மட்டும் நீக்குவது தான் நடவடிக்கையா என பெண்கள் குமுறல்

சென்னை, நவ.26: ஆபாச ஆடியோ விவகாரத்தில் திருச்சி சூர்யாவுக்கு ஆதரவாக அண்ணாமலை இருப்பதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளதால், பாஜவில் உள்ள பெண்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். அண்ணாமலை தூண்டிவிட்டதால்தான் அவர் பேசினார் என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.

பாஜவில் மூத்த தலைவர்களை மாநில தலைவர் அண்ணாமலை ஓரங்கட்டுவதாகவும், மதிப்பதில்லை என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அவர் மூத்த தலைவர்கள் பொன்.ராதாகிருஷ்ணன், சி.பி.ராதாகிருஷ்ணன், ஒன்றிய அமைச்சர் முருகன், எச்.ராஜா உள்ளிட்ட பல்வேறு தலைவர்களிடம் ஆலோசனை நடத்துவதில்லை. தான் ஒருவர் மட்டுமே கட்சியில் இருப்பதுபோன்ற நிலையை உருவாக்கி வருகிறார். தனக்கு மட்டுமே ஆயிரக்கணக்கில் கூட்டம் கூடுகிறது என்று நிரூபிப்பதற்காக பல லட்சம் ரூபாய் செலவு செய்கிறார் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்நிலையில் அண்ணாமலைக்கும், நடிகை காயத்திரி ரகுராமுக்கும் இடையே மோதல் எழுந்தது. காயத்திரியை மட்டும் தட்டி வைக்கும் வேலையில் அண்ணாமலை இறங்கினார். இதனால் அவர் பொங்கி எழுந்து, இணைய தளங்களில் தனது மனக்குமுறலை வெளிப்படுத்தி வந்தார். இரு நாட்களுக்கு முன்னர் காயத்திரி ரகுராமை மட்டும் கட்சியில் இருந்து அண்ணாமலை அதிரடியாக நீக்கினார். அதேநாளில்தான் திருச்சி சூர்யா- சிறுபான்மையினர் மாநில நிர்வாகி டெய்சி சரணுக்கு இடையே நடந்த ஆபாச உரையாடல் இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

இது தேசிய அளவில் பரபரப்பை ஏற்படுத்தியதால், டெல்லி தலைமையும் இதுகுறித்து விசாரிக்க உத்தரவிட்டது. இதனால், நேற்று இருவரிடமும் விசாரணை நடந்தது. விசாரணையில் டெய்சியை ஆபாசமாக பேசியதும், வெட்டி மெரினாவில் வீசுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததையும் ஒப்புக்கொண்டு மன்னிப்பு கடிதம் கொடுத்தார். அதைத் தொடர்ந்து மாலையில் திருச்சி சூர்யாவின் கட்சிப் பொறுப்புகளை பறித்து அண்ணாமலை உத்தரவிட்டார். ஆனால் கட்சியை விட்டு நீக்கவில்லை. காயத்திரியை கட்சியை விட்டு நீக்கிய அண்ணாமலை, திருச்சி சூர்யாவை நீக்காமல் இருந்தது ஏன் என தற்போது பாஜவில் உள்ள பெண்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

காயத்திரிக்கு ஒரு நீதி, திருச்சி சூர்யாவுக்கு ஒரு நீதியா? மேலும், அண்ணாமலை சொல்லித்தான் டெய்சியை சூர்யா திட்டுவதாகவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. தனக்கு எதிராக செயல்படுவதாக கருதுகிறவர்களுக்கு எல்லாம் அவர் இதுபோன்று மிரட்டல் விடுவதாகவும் கூறப்படுகிறது. இதனால்தான் சூர்யா மிரட்டும் போது மோடிகிட்ட போறீயா, அமித்ஷா, நட்டாவிடம் போறீயா? எங்க வேணும்னாலும்போ என்று மிரட்டுவார். அண்ணாமலையை மட்டும் கூற மாட்டார். ஏனெனில் அண்ணாமலை சொல்லித்தான் இந்த மிரட்டலில் அவர் ஈடுபட்டார் என்று கூறப்படுகிறது. இதனால்தான் அவரை கட்சியை விட்டு நீக்காமல், பொறுப்புகளை மட்டுமே பறித்தார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

> கே.டி.ராகவன் விஷயத்திலும் தனக்கு தெரியாது என்று முதலில் மறுத்தவர் பின்னர், வீடியோவை வெளியிட்டவர், அண்ணாமலையுடன் பேசும் ஆடியோவை வெளியிட்டதும் அமைதியாகி விட்டார். இப்போதும் அதே நாடகம்தான் நடக்கிறது

மேலும் ஆடியோ கடந்த 21ம் தேதிதான் வெளியானது. அப்போது கருத்து தெரிவித்த, டெய்சி, 15 நாளுக்கு முன்னரே இதுபற்றி அண்ணாமலையிடம் புகார் செய்யப்பட்டது என்று தெரிவித்தார். அப்படி என்றால், 5ம் தேதிக்கு முன்னரே அவர் புகார் செய்திருக்கலாம். இதை அண்ணாமலைக்கு நெருக்கமான அமர்பிரசாத் ரெட்டி ஒப்புக்கொண்டுள்ளார். அதோடு, அப்போது விசாரணைக்கு சூர்யா வரவில்லை என்றும் கூறியுள்ளார். விசாரணைக்கு வராத ஒருவர் மீது ஏன் 15 நாட்களாக நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளனர். விசாரணை குழுவை விட சூர்யா பெரியவரா அல்லது அவரை தூண்டிவிட்டவர் பெரியவரா என்ற சந்தேகம் பாஜ மகளிர் அணியினர் மத்தியில் எழுந்துள்ளது.

மேலும், கடந்த 17ம் தேதி அதாவது ஆடியோ வெளியாவதற்கு 4 நாட்களுக்கு முன்னர் அண்ணாமாலை, திருச்சி சூர்யா, கேசவ விநாயகம் ஆகியோர் ஒரே ரயிலில் காசியில் பிரதமர் மோடி கலந்துகொள்ளும் சங்கமம் நிகழ்ச்சிக்கு சென்றனர். அதுவும் ஒரே பெட்டியில் அடுத்தடுத்த இருக்கைகளில் அமர்ந்து பயணம் செய்துள்ளனர். இதை போட்டோ எடுத்தும் வெளியிட்டுள்ளார் சூர்யா. விசாரணைக்கு வர மறுத்த ஒருவருடன் எப்படி அண்ணாமலை காசி வரை பயணம் செய்தார். இதனால் முழுக்க முழுக்க அண்ணாமலையின் ஆசிர்வாதத்துடன்தான் அவர் பேசினார் என்று கட்சியினர் தற்போது முழுமையாக நம்புகின்றனர். அதேபோலதான், கே.டி.ராகவன் விஷயத்திலும் தனக்கு தெரியாது என்று முதலில் மறுத்தவர் பின்னர், வீடியோவை வெளியிட்டவர், அண்ணாமலையுடன் பேசும் ஆடியோவை வெளியிட்டதும் அமைதியாகி விட்டார். இப்போதும் அதே நாடகம்தான் நடக்கிறது என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பாஜ தலைவர்கள் பலர் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் கூறப்படும் நிலையில், இதுபோன்ற விவகாரங்கள் தமிழக பாஜவினர் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

TATA
டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட்
புதிய முகவரி: 11வது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை 400013. கிளை முகவரி: டாடா கேபிடல் வீட்டுவசதி நிதி லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், #6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024..

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு
(கடன